பக்கங்கள்: ஆறு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 5 00

சுடர்: 7 திருவள்ளுவர் ஆண்டு 2023 ஆனி 11 வியாழக்கிழமை (25-06-1992) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 210

## பழுகாமம் மோதலில் 6 ராணுவத்தினர் பலி!

### இரு வேங்கைகள் வீரச்சாவு

யாழ்ப்பாணம், ஜூன் 25

மட்டக்களப்பு மாவட்டம் பழுகாமத்துக்கு அருகே சின்னக்காந்தி புரம் பகுதியில் நேற்று முன்தினம் காலை 10,40 மணியளவில் ரோந்து சென்ற இராணுவ அணி ஒன்றின் மீது விடுதலைப் புலிகள் நடத்திய அதிரடித் தாக்குதலில் ஆறு இராணுவத்தினர் கொல்லப் பட்டனர். அவர்களிடமிருந்து ஆயுத தளபாடங்கள் பலவற்றைப் புலிகள் கைப்பற்றினர். இத்தாக்குதல் சம்பவத்தில் இரு வேங்கைகள் வீரமரணமடைந்தனர்.

பழுகாமம் முகாமிலிருந்து புறப்பட்டு தும்பன்கேணி பகுதியை நோக்கிச் சென்று கொண்டிருந்த — சுமார் 75க்கும் மேற்பட்ட இராணுவத்தினரைக் கொண்ட — ரோந்து அணி மீது சின்னக் காந்திபுரம் என்னுமிடத்தில் வைத்து புலிகள் இந்தத் தாக்குதலைத் தொடுத்தனர்.

தாக்குதலுக்கு இலக்கான இராணுவ அணியினருக்கு உதவுவதற்காக பழுகாமம். வெல்லாவெளி, கொக்கட்டிச் சோலை ஆகிய முகாம்களில் இருந்து கவச வாகனங்கள் சகிதம் பெரும் எண்ணிக்கையான படையினர் முன்னேறி வந்தனர்.

விடுதலைப் புலிகளின் மற்றோர் அணி இவர்கள் மீது தாக்குதல் நடத்தியது.

[உ-5-10]

### வீரமரணம்

யாழ்ப்பாணம், ஜூன் 25

சின்னக்காந்திபுரத்தில் விடுதலைப் புலிகள் நடத்திய துணிகரத் தாக்குதலின் போது புலிகள் தரப்பில் மேஜர் பயில்வான் [சின்னத்தம்பி சிவராஜா — கொக்கட்டிச்சோலை], கப்டன் கீர்த்தி (வைலாயபிள்ளை உதயகுமார் — களுவாஞ்சிக்குடி) ஆகிய இரு வேங்கைகளும் வீரமரணம் அடைந்தனர். [உ-5]

### மீட்கப்பட்ட ஆயுதங்கள்

யாழ்ப்பாணம், ஜூன் 25

சின்னக்காந்திபுரம் தாக்குதலின் போது விடுதலைப் புலிகள் கைப்பற்றிய ஆயுத தளபாடங்களின் விபரம்:-

★ ரீ - 56 - 2 ரகத் துப்பாக்கி — 2
★ ரீ - 56 புதியரகத் துப்பாக்கி — 1
★ அதற்குரிய மகஸீன்கள் — 15
★ ரீ -81 - 1 ரகத் துப்பாக்கி — 1
★ அதற்குரிய மகஸீன்கள் — 4
★ நடுத்தர ரவைகள் — 500
★ ஜே. ஆர் கிரனேட்டுகள் — 3
★ 40 மி. மீ. ஷெல் — 6
★ சிறிய ரக கிளைமோர் — 1
★ வெடிக்க வைக்கும் கருவி — 1
★ மின்சார வயர் சுருள் — 1
★ ஹோல்ஸ் — 1

---

கடும் நடவடிக்கை எடுக்கப்படும்:

## ம. எண்ணெய் பதுக்குவது ஒரு சமூக விரோதச் செயல்

### காவல்துறைப் பொறுப்பாளர் அறிவிப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 25

தற்போதைய போர்க்கால சூழ்நிலையைச் சாட்டாக வைத்து கொள்ளை இலாபம் பெறும் நோக்குடன் பொது மக்களின் அத்தியாவசியப் பொருள்களில் ஒன்றான மண்எண்ணெயைப் பதுக்கும் நடவடிக்கைகளில் சில வர்த்தகர்கள் மீண்டும் ஈடுபட்டுள்ளனர். விடுதலைக்காகப் போராடும் மக்கள் மீது இவ்வாறான தேவையற்ற துன்பத்தையும், துயரத்தையும் திணிக்க முயல்வது மன்னிக்க முடியாத குற்றமாகும் இதை ஒரு சமூக விரோத செயலாகவே கருதுகின்றோம்

— இவ்வாறு தமிழீழ காவல் துறைப் பொறுப்பாளர் திரு. பா நடேசன் நேற்று விடுத்த செய்திக் குறிப்பு ஒன்றில் தெரிவித்திருக்கிறார்.

பொதுமக்களின் அத்தியாவசியப் பொருள்களை பதுக்குவோர் மீதும், கூடிய விலையில் விற்போர் மீதும் அபராதம் விதிக்கப்படுவதுடன் குறிப்பிட்ட காலத்திற்குத் தடுத்தும் வைக்கப்படுவர். இவ்வாறு அத்தியாவசியப்

(5 ஆம் பக்கம் பார்க்க)

நிவாரணம் வழங்க வந்துசேர்ந்த

## 40 ஆயிரம் பைக்கட் பால்மா புழுப்பிடித்து நாசம்!

யாழ்ப்பாணம், ஜூன் 25

யாழ். மாவட்டத்துக்கு நிவாரணம் வழங்க கொழும்பில் இருந்து அனுப்பப்பட்ட பால்மா வகைகளில் — சுமார் 14 லட்சம் ரூபா பெறுமதியான 40 ஆயிரம் பைக்கட்டுகள் புழுப்பிடித்த நிலையில் கண்டுபிடிக்கப்பட்டு எரித்து அழிக்கப்பட்டன.

யாழ் மாவட்ட மக்களுக்கு வழங்கவென கொழும்பு புனர்வாழ்வு அமைச்சால் கடந்த வருடம் முதல் கப்பல் மூலம் அனுப்பப்பட்ட பால்மா வகைகள் சிமெந்து கடதாசி பைகளுடன் ப. நோ. கூ. சங்கங்களுக்கு வழங்கப்பட்டிருந்தன.

அவை உடைக்கப்படாத நிலையில் ப. நோ. கூ. சங்க களஞ்சியங்களில் வைக்கப்பட்டிருந்தன.

தற்சமயம் அந்த பைகள் உடைக்கப்பட்டு பார்த்த சமயம், உள்ளே இருந்த பைக்கட்டுகள் புழுக்களுடன், பழுதடைந்து காணப்பட்டன.

கப்பலில் ஏற்றி, இறக்கும் போது நனைந்தும், போக்குவரத்தின் போது அவை உடைந்தும் பழுதடைந்து இருக்கலாம் எனக் கருதப்படுகிறது.

40 ஆயிரம் பைக்கட்டுக் கொண்ட லக்ஸ்பிறே, ஹைலண்ட், விட்டாஸ்பிறே ஆகிய பால்மா வகைகளே பழுதடைந்தவையாகும். (ஒ-3)

## வலி. வடக்கு அகதிகளுக்கு மேலும் 2 வார உலர் உணவு

கடந்த 28 ஆம் திகதிக்குப் பின்னர் இடம்பெற்ற இராணுவ நடவடிக்கைகளினால் வலி. வடக்கு, சண்டிலிப்பாய்ப் பகுதியில் இருந்து இடம்பெயர்ந்த சுமார் 5 ஆயிரம் குடும்பங்களுக்கும் மேலும் இருவாரகால உலர் உணவு நிவாரணம் வழங்கப்படும்.

இதற்கான அனுமதியை புனர்வாழ்வு அமைச்சு யாழ். அரச அதிபருக்கு வழங்கியுள்ளது.

ஏற்கனவே இந்த அகதிகளுக்கு ஒரு மாதகால நிவாரணம் வழங்கப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது. [உ-3-162]

கர்நாடக இசைமேதை

## மகாராஜபுரம் சந்தானம் கார் விபத்தில் மரணம்

சென்னை, ஜூன் 25

பிரபல கர்நாடக இசைமேதை மகாராஜபுரம் சந்தானம் (வயது 64) நேற்று கார் விபத்து ஒன்றில் உயிரிழந்தார்.

அவர் பயணஞ் செய்த கார் விழுப்புரம் அருகே உக்கிரபாண்டி கிராமத்தில் நின்று கொண்டிருந்த ட்ராக்டர் ஒன்றின் மீது மோதிய போது, அவரும் அவரது நண்பர் இராமநாதனும் அந்த இடத்திலேயே உயிரிழந்தனர்.

கும்பகோணத்தில் இருந்து சென்னை நோக்கி அவர் தமது மனைவியுடன் காரில் பயணம் செய்தபோதே அந்த விபத்து ஏற்பட்டது. அவரது மனைவி ஞானமும் இன்னொரு பெண்ணும் பலத்த காயங்களுக்குள்ளாகினர்.

கர்நாடக இசையில் தனிப் பாணி வகுத்த மகாராஜபுரம் சந்தானத்துக்கு இந்திய அரசு அண்மையில் பத்மஸ்ரீ விருது அளித்துக் கௌரவித்திருந்தது.

மகாராஜபுரம் சந்தானம் யாழ்ப்பாணம். இராமநாதன் இசைக் கல்லூரியின் முதல்வராகவும் சுமார் ஐந்து ஆண்டுகள் பணியாற்றியிருந்தார். யாழ்ப்பாணத்தில் பல இசைக் கலைஞர்களை உருவாக்கிய பெருமை அவருக்கு [illegible]

[illegible]

### சட்ட வைத்திய அதிகாரி காலமானார்

யாழ்ப்பாணம், ஜூன் 25

யாழ். சட்ட வைத்திய அதிகாரியும் யாழ் பல்கலைக் கழக மருத்துவபீட பேராசிரியருமான நவரத்தினம் சரவணபவானந்தன் [வயது 57] கொழும்பில் நேற்று முன்தினம் மாரடைப்பால் காலமானார்.

யாழ். பல்கலைக் கழகத்தின் முதலாவது சட்ட மருத்துவத்துறைப் பேராசிரியரான சரவணபவானந்தனின் திடீர் மறைவு பற்றிய செய்தி வெளியானதை அடுத்து யாழ். பல்கலைக்கழகம் நேற்று மூடப்பட்டது

பேராசிரியரின் இறுதிச் சடங்குகள் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை கொழும்பில் நடைபெறும். [உ-5-15]

### யாழ். இளைஞர் சீதுவையில் கைது

கொழும்பு, ஜூன் 25

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த 23 வயது தமிழ் இளைஞர் ஒருவர் சீதுவையில் கைது செய்யப்பட்டார்.

விசாரணையின் போது தாம் புளொட் அமைப்பைச் சேர்ந்தவர் என்று அவர் கூறியதாக பொலிஸ் பேச்சாளர் [illegible] தெரிவித்தார். [illegible]

## இஸ்ரேல் தேர்தலில் ஆளும் கட்சி தோல்வி!

டெல்அவிவ், ஜூன் 25

இஸ்ரவேலிய பொதுத் தேர்தலில் ஆளும் லிக்யூட் கட்சி தோல்வியடைந்துள்ளதாக அறிவிக்கப்படுகிறது. உத்தியோகபூர்வ முடிவுகளின் படி ''ராபின'' தலைமையிலான தொழிற்கட்சி அடுத்த கூட்டரசாங்கம் ஒன்றை அமைப்பதற்குத் தேவையான தொகுதிகளில் வெற்றியீட்டியுள்ளது.

1960 ஆம் ஆண்டுக்குப் பின் லிக்குட் கட்சி சந்தித்த மிகப் பெரும் தோல்வி இது என்று வர்ணிக்கப்படுகிறது

120 உறுப்பினர்களைக் கொண்ட இஸ்ரேலிய நாடாளுமன்றத்தில் தொழிற்கட்சி தலைமையிலான கூட்டணி 62 தொகுதிகளில் வெற்றியீட்டியது தொழிற்கட்சி தனித்து 45 தொகுதிகளில் வெற்றியீட்டியது.

லிக்யூட் கட்சித் தலைமையிலான வலது சாரிக் கூட்டணிக்கு 58 ஆசனங்களே கிடைத்தன. லிக்யூட் கட்சி தனித்து 32 ஆசனங்களைப் பிடித்தது.

இதுவரை திரு. யிற்ஷாக் ஷாமிர் தலைமையிலான லிக்யூட் கட்சியே இஸ்ரேலை ஆண்டு வந்தது [உ-எ]

## அமைதியை குலைக்க முயல்கிறார் கலைஞர்!

### ஜெயலலிதா குற்றச்சாட்டு

சென்னை - ஜூன் - 25

''ஆர்ப்பாட்டங்களை ஒழுங்கு செய்வதன் மூலம் தி மு.க. தலைவர் மு.கருணாநிதி தமிழ் நாட்டில் அமைதியைக் குலைக்க முயற்சிக்கின்றார்.''

இப்படிக் குற்றஞ்சாட்டியுள்ளார் தமிழக முதலமைச்சர் செல்வி ஜெயலலிதா.

தனது தலைமையின் கீழ் தற்போதைய அரசாங்கம் மாநிலத்தில் சட்டம், ஒழுங்கை எவ்வாறு நிலைநாட்டிப் பேணிவருகின்றது என்பதை மக்கள் அறிவர் என்று தெரிவித்த முதலமைச்சர் அந்த அமைதியைக் குலைக்கவே கருணாநிதி முயல்கிறார் என்று குற்றஞ் சாட்டினார்.

இந்தக் குற்றச்சாட்டுக் குறித்து கருத்து வெளியிட்ட கலைஞர் கருணாநிதி —

''தம்மீது நான் வேண்டும்

(6 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இணைப்புக்கு எதிர்ப்பு என்று ஜனாதிபதி கூறிய பின்

# தெரிவுக்குழுவில் ஆதரவாக கருத்துடன்பாடு ஏற்படுமோ?

## குமார் பொன்னம்பலம் கேள்வி

கொழும்பு, ஜூன் 25

இணைப்புக்கு எதிர்ப்பு என்று ஐக்கிய தேசியக் கட்சி கூறிய பின்னர் பெரும்பான்மையாக ஐக்கிய தேசிய கட்சி எம். பிக்கள் அங்கம் வகிக்கும் தெரிவுக் குழுவில் இணைப்புக்கு ஆதரவாக கருத்துடன்பாடு ஏற்பட முடியுமா?

தமிழ்க் காங்கிரஸ் தலைவர் குமார் பொன்னம்பலம் விடுத்த அறிக்கையில் மேற்கண்டவாறு கேட்டுள்ளார்.

இம் மாதம் 15ஆம் திகதி இடம்பெற்ற ஜனாதிபதி — தமிழ்க் கட்சிகள் சந்திப்பு பற்றி திரு. குமார் பொன்னம்பலம் வெளியிட்ட கருத்துக்குப் பதில் அளித்து ஜனாதிபதி செயலகம் அண்மையில் அறிக்கை ஒன்றை வெளியிட்டிருந்தது.

ஜனாதிபதி செயலகத்தின் அறிக்கைக்கு பதில் அளிக்கும் முகமாக விடுத்த அறிக்கையிலேயே திரு. குமார் பொன்னம்பலம் மேற்கண்டவாறு கூறி உள்ளார்.

குமார் பொன்னம்பலம் விடுத்த அறிக்கை வருமாறு:

இம்மாதம் 15ஆம் திகதி ஜனாதிபதியுடன் இடம்பெற்ற சந்திப்பு அவமரியாதை தருவதாகவும், விரக்தி ஏற்படுத்துவதாகவும் இருந்தது என்று நான் கூறியதை மீண்டும் வார்த்தைக்கு வார்த்தை வலியுறுத்துகின்றேன்.

இந்த சந்திப்பின் போது ஏழு தமிழ்க் கட்சிகள் கூட்டாகத் தயாரித்த 4 அம்ச யோசனைத் திட்டத்தை திரு. அ. தங்கத்துரை வாசித்தார்.

அதன் முடிவில், இந்த யோசனைத் திட்டத்தை விவாதிக்க இது சரியான இடம் அல்ல; தெரிவுக்குழு தான் சரியான இடம் என்று மட்டும் ஜனாதிபதி கூறியிருப்பாரேயானால், அது எவருக்கும் விசனத்தை ஏற்படுத்தி இருக்காது.

ஆனால் ஜனாதிபதியோ, இணைப்புக்கு ஐக்கிய தேசியக் கட்சி எதிர்ப்பு என்றும், அக் கட்சியின் தேர்தல் விஞ்ஞாபனத்தில் அது கூறப்பட்டுள்ளது என்றும், ஆனால் இணைப்பு விஷயத்தில் தெரிவுக்குழுவில் கருத்துடன்பாடு காணப்பட்டால் அதனைத் தமது கட்சி எதிர்க்காது என்றும் கூறினார்.

சுயமாகக் கிரகித்துக் கொள்ளும் எவரும் ஜனாதிபதி கூறியதன் முழுத் தாக்கத்தையும் உணர்ந்திருப்பர்.

இணைப்புக்கு ஐக்கிய தேசியக்கட்சி எதிர்ப்பு என்று கூறிய பின்னர், பெரும்பான்மையாக ஐ.தே.க. எம். பிக்கள் அங்கம் வகிக்கும் தெரிவுக் குழுவில் இணைப்புக்கு ஆதரவாக கருத்துடன்பாடு ஏற்பட முடியுமா?

ஒரு நாட்டின் ஜனாதிபதி இப்படிக் கூறியதை, நாம் எல்லோரும் முட்டாள்கள் கூட்டம் என்று அவர் எண்ணிவிட்டார் என்றே அர்த்தம் கொள்ள வேண்டும்.

தான் என்ன பேசுகிறார் என்பது ஜனாதிபதிக்கு தெரியவில்லை என்று கூறிவிட முடியாது. 'ஈழம் இல்லை; எல்லாம் தருவேன்' என்று கூறிய ஜனாதிபதி ஒருவர் தெரிவித்த அறிவுபூர்வமற்ற கூற்று இதுவாகும்.

இப்போது நான் கேட்கின்றேன். ஜூன் 15 சந்திப்பு அவமரியாதையானது என்று நான் சொன்னதில் நியாயமில்லையா? மக்கள் தீர்மானிக்கட்டும்.

இப்படி அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(இ-எ)

## ஜனாதிபதி வேட்பாளராக லலித்!

கொழும்பு, ஜூன் 25

அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணியின் வேட்பாளராக திரு. லலித் அத்துலத் முதலியை நிறுத்துவது என்றும் —

முன்னணியின் தலைவராகவும் தேர்தல் பிரசார பிரதம அமைப்பாளராகவும் திரு. காமினி திஸாநாயக்காவை நியமிப்பது என்றும் —

அக்கட்சி வட்டாரங்கள் தீர்மானித்திருப்பதாக கொழும்புப் பத்திரிகைச் செய்திகள் தெரிவித்தன.

[உ-எ]


## 31ஆம் நாள் நினைவஞ்சலி



திருமதி
குஞ்சுப்பிள்ளை வேலுப்பிள்ளை
[புங்குடுதீவு]

மண்ணுலகம்; 13 - 02 - 1910
விண்ணுலகம்: 26 - 05 - 1992

திதி: 25-06 1992

பால்வினைந் தூட்டிப் பரிந்தெம்மை வளர்த்து
பல்வகைச் சிறப்பும் பாரினில் பெற்றே இன்று
நல்வாழ்வு நாம் வாழத்துணை நின்ற அன்னையே!
நின் ஆத்ம சாந்தி வேண்டி பிரார்த்திக்கின்றோம்!!

மக்கள், மருமக்கள்
பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள்.

7/2, பிறவுண் வீதி,
முதலாம் ஒழுங்கை,
யாழ்ப்பாணம்.

(21517)

BITSMANS
கல்வி நிறுவனம்,
மானிப்பாய்.

A/L 93/94

★ பௌதீகம் ★
(பொறியியலும், நீர் நிலையியலும்)
ஆசிரியர்:
திரு. யோகதாஸன்
B. Sc. [Hons

★ பொது இரசாயனம் ★
ஆசிரியர்:
திரு. சிவசோதி
B. Sc. (Hons)

ஆரம்பம்: 25-06-1992
வியாழன் 4-00 p. m.
(சி-2708)

வேம்படி
பழைய மாணவர் சங்கம்

28 - 06 - 1992 நடைபெறவிருந்த
75ஆவது ஆண்டு நிறைவு விழாவும்
ஆண்டுப் பொதுக் கூட்டமும்
05 - 07 - 1992 இற்கு
ஒத்திவைக்கப்பட்டுள்ளன.

அதிர்ஷ்ட லாபச் சீட்டிழுப்புத் திகதியும்
பின்போடப்பட்டுள்ளது.

ஸ்தாபகர் தினம்: 29 — 06 — 1992

- தலைவர்.

[சி-2713]

G. A. Q.
1st. in Com.
1992 / 1993

யாழ். பல்கலைக்கழகத்தினால் மேற்கூறப்பட்ட பாடநெறிக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இதற்கான விரிவுரைகள் ஆரம்பம்:
27 - 06 - 1992 [8 மணி]

விவரங்களையும் நேர அட்டவணையையும் நேரில் பெற்றுக் கொள்ளவும்.

நிர்வாகி,
S. அருள்நங்கை

புதிய உயர் கல்லூரி
ஆரியகுளம் சந்தி, யாழ்ப்பாணம்.

[சி-2712]

மக்கள் நலன்காக்கும் பிரிவு
பொது அறிவித்தல்

எதிர்வரும் ஆடி மாதத்தில் தையல் பயிற்சி வகுப்புக்களும் தையல் வேலை வாய்ப்புக்களும் எமது அமைப்பினால் ஆரம்பிக்கப்படவுள்ளது. இதன் பிரகாரம் பின்வரும் வெற்றிடங்களுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. தையல் பயிலுநர்
2. தையல் பயிற்சி ஆசிரியர்
3. தையல் துறையில் அனுபவம் வாய்ந்தவர்

விண்ணப்ப முடிவு திகதி: 10 — 07 — 1992

மேலதிக விவரங்களுக்கு தலைமை அலுவலகத்தில் தொடர்பு கொள்ளவும்.

மக்கள் நலன்காக்கும் பிரிவு,
தலைமையகம்,
இருபாலைச் சந்தி,
கோப்பாய்.

[21515]

பயிலுனர் ஆசிரியர் தெரிவு
11-7-92 போட்டிப் பரீட்சை
விசேட பயிற்சி வகுப்புகள்

ஆரம்பம்: 29-6-92 பி. ப. 2-00 மணி

பாடநெறி:
பொதுஅறிவு, பொது உளச்சார்பு

◎ தொடர்ச்சியாக 10 தினங்கள் ◎

நாளாந்தம் 3 மணித்தியாலங்கள்
நாளாந்தக் கட்டணம் ரூபா 25/-
அச்சடித்த பாடக் குறிப்புகள்

ASTAN INSTITUTE
101/10, STANLEY ROAD, JAFFNA.
[ மக்கள் வங்கிக்கு அருகில் ]

[சி/2714]


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈழ அகதிகளைத் திருப்பி அனுப்புவது கொலைக்களம் அனுப்புவதற்குச் சமன்

## பண்ருட்டி ராமச்சந்திரன் சாடுகிறார்

சென்னை, ஜூன் 25
"ஜெயலலிதா ஈழத் தமிழ் அகதிகளை இலங்கைக்கு கட்டாயமாக திருப்பி அனுப்புகிறார். இது இலங்கைத் தமிழர்களை கொலைக் களத்துக்கு அனுப்புவது போன்றதாகும்."

இப்படிக் கூறினார் பண்ருட்டி ராமச்சந்திரன்.

சென்னை, நேதாஜி நகரில் அ.தி.மு.க ஆட்சியின் அடக்கு முறையைக் கண்டித்து பாட்டாளி மக்கள்கட்சி சார்பில் பொதுக் கூட்டம் நடந்தது. அக் கூட்டத்தில் பேசுகையிலேயே அவர் இப்படிக் கூறினார்:

அவர் மேலும் சொன்னதாவது:

இலங்கையில் இனப் படுகொலை நடைபெறாமல் தடுக்க வேண்டும் என்று நாங்கள் எச்சரித்தோம். ஆனால் அது செவிடன் காதில் ஊதிய சங்காக ஆகி விட்டது.

இலங்கையில் இனப் படுகொலை நடக்கும் நேரத்தில் தமிழக அரசு சார்பில் ஏதாவது அறிவிப்பு வருகிறதா என எதிர்பார்த்தோம். அறிவிப்பு வருகிறது. என்ன தெரியுமா? காலை 8 மணி முதல் இரவு 11 மணி வரை மதுபான நிலையங்களைத் திறக்கலாம் என்று.

யாழ்ப்பாணத்தில் இது வரை இல்லாத அளவுக்கு ஊரடங்கு அமுலாக்கப்பட்டுள்ளது. புப்படைகளைக் கொண்டு சிங்கள அரசு தமிழர்களை தாக்கிக் கொண்டு இருக்கிறது. கப்பல்படை, விமானப்படை மற்றும் பீரங்கிகளைக் கொண்டும், 45 ஆயிரம் துருப்புக்களைக் கொண்டும் சிங்கள பேரினவாதிகள் தமிழ் மக்களை சூறையாடிக் கொண்டிருக்கிறார்கள். தொடர்ந்து இந்த இனப்படுகொலை நடந்தால் யாழ்ப்பாணத்தில் உள்ள அத்தனை தமிழ் மக்களும் சாகடிக்கப் படுவார்கள்.

இந்திய அரசும், தமிழக அரசும் தமிழர்களுக்குக் கை கொடுக்காதென்ற துணிவு சிங்கள இராணுவத்தினருக்கு பிறந்திருக்கிறது. எனவே, தமிழர்களை, தாய்மார்களை, குழந்தைகளை சூறையாடிக் கொண்டிருக்கின்றனர் அவர்கள்

இவ்வாறு அவர் கூறினார். (ஒ-3)

## தாய்மாருக்கு செயல்முறை வகுப்புகள்

யாழ்ப்பாணம், ஜூன் 25
யாழ். மாநகராட்சி மன்றப் பிரதேசத்திலுள்ள பாலர் பாடசாலைப் பிள்ளைகளின் தாய்மாருக்கு, உள்ளூரில் கிடைக்கக் கூடிய வளங்களைக் கொண்டு சத்துணவு தயாரிக்கும் வழிகள் பற்றிய செயல் முறை சுகாதாரக் கல்வி வகுப்புக்கள் நடத்தப் படவுள்ளன.

'யுனிசெவ்' உதவியுடன் யாழ். மாநகராட்சி மன்ற நகர்ப்புற அடிப்படைச் சேவைகள் நிகழ்ச்சித் திட்டப் பிரிவினரால் முதற் கட்டமாக 6 வகுப்புகளை நடத்துவதற்கு ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன. (ஒ)

## ரூ. 80 லட்சம் பணம், நகை முல்லை. முகாமில் மோசடி

கொழும்பு, ஜூன் 25
முல்லைத்தீவு இராணுவ முகாமில் இடம்பெற்ற மோசடிச் சம்பவத்தில் கையாடல் செய்யப்பட்ட பணம் மற்றும் நகைகளின் பெறுமதி குறைந்தது 80 லட்சம் ரூபாவாக இருக்கலாம் என்று நம்பப்படுவதாக மக்கள் வங்கி வட்டாரங்கள் தெரிவித்தன.

மக்கள் வங்கியின் முல்லைத்தீவுக் கிளையில் அடகு வைக்கப்பட்ட நகைகளே கையாடல் செய்யப்பட்டன என்றும் — கையாடல் செய்யப்பட்ட பணம் வங்கியின் பாதுகாப்புப் பெட்டியில் வைக்கப் பட்டிருந்தது என்றும் தெரிவிக்கப்படுகிறது.

1990 ஜூனில் சண்டை ஆரம்பித்ததன் பின்னர் இவை பாதுகாப்புக்காக முல்லைத்தீவு இராணுவ முகாமுக்கு எடுத்துச் செல்லப்பட்டு அங்கு வைக்கப்பட்டிருந்தன என்று மக்கள் வங்கி வட்டாரங்கள் தெரிவித்தன.

இம்மோசடி தொடர்பாகக் கைது செய்யப்பட்ட படையினர் அனைவரும் முல்லைத்தீவு முகாமிலேயே தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். இம் மோசடியில் சம்பந்தப்பட்ட உண்மையான தகவல்களை பெற்றுக் கொள்வது தொடர்பான தீவிர விசாரணைகளில் படை அதிகாரிகள் ஈடுபட்டுள்ளனர்.

இதேவேளை — கொழும்பு இராணுவத் தலைமைக் காரியாலயத்தில் இடம் பெற்றதாகக் கூறப்படும் 80 லட்சம் ரூபா மோசடியில் சம்பந்தப் பட்டதாகக் கூறப்படும் கேர்ணல் ஒருவர் வேலையில் இருந்து இடைநிறுத்தி வைக்கப்பட்டுள்ளார் என்று தெரிவிக்கப்பட்டது. [இ-எ]

## புலோலியில் மாவீரர்கள் நினைவு தினம்

வடமராட்சி, ஜூன் 25
மாவீரர்கள் நினைவு தின விழாவும் நினைவஞ்சலிக் கூட்டமும் இன்று வியாழக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு புலோலி மாலாவத்தை வைதேகி பாலர் பாடசாலையில் நடைபெறவுள்ளன.

இரண்டாம் லெப்டினன்ட் வைதேகி, ரதீன், றோகான் ஆகியோரது நினைவாக விளையாட்டுப் போட்டியும் இடம்பெறும். [ஒ-165]

## தமிழக முகாம்களில் 88 ஆயிரம் ஈழ அகதிகள்

சென்னை, ஜூன் 25
தமிழகத்தில் 18 மாவட்டங்களில் — 163 முகாம்களில் — 88 ஆயிரம் ஈழ அகதிகளே தங்கியுள்ளனர்.

ஈழ அகதிகளுக்கான மாநில ஒருங்கிணைப்பு அதிகாரி திரு. சி. என். ராமதாஸ் இப்படிக் கூறினார்.

1990 ஜூன் மாதத்தில் 337 முகாம்கள் இருந்தன என்றும், அந்த முகாம்களில் இருந்து 23 ஆயிரத்து 126 அகதிகள் அவர்களது தாயகத்துக்கு திருப்பி அனுப்பப் பட்டனர் என்றும் அவர் தெரிவித்தார்.

தமிழகத்தில் முகாம்களுக்கு வெளியிலும் பல ஆயிரக் கணக்கான ஈழ அகதிகள் தங்கியுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ஒ-3)


யாழ். இந்து மகளிர் கல்லூரி

**பழைய மாணவர் சங்கக் கூட்டம்**

மேற்படி சங்கக் கூட்டம் வெள்ளிக்கிழமை (26-06-92) மாலை 4-00 மணிக்கு கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது. பழைய மாணவர்கள் அனைவரும் சமுகமளிக்குமாறு வேண்டப்படுகின்றனர்.

காரியதரிசி:
திருமதி ம. பரமநாதன்.

[21513]


## கனகரத்தினம் மகாவித்தியாலய பரிசளிப்பு விழா

யாழ்ப்பாணம், ஜூன் 25
யாழ். கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலய வருடாந்தப் பரிசளிப்பு விழாவும், நிறுவுநர் நினைவு தினமும் நாளை மறுதினம் சனிக்கிழமை காலை நடைபெற உள்ளது.

கல்லூரி அதிபர் திரு. மு. இராமலிங்கம் தலைமையில் நடைபெறும் இவ் வைபவத்தில் யாழ். பல்கலைக்கழக துணை வேந்தர் பேராசிரியர் அ. துரைராசா முதன்மை விருந்தினராகக் கலந்து கொள்வார். வடமாகாண இணைக்கப்பட்ட பல்கலைக் கல்லூரி பதில் பணிப்பாளர், கலாநிதி சு. மோகனதாஸ் நிறுவுநர் நினைவுரையை நிகழ்த்துவார். மாணவர்களுக்குரிய பரிசில்களை திருமதி இராசேஸ்வரி துரைராசா வழங்குவார். நிகழ்ச்சிகள் காலை 9 மணிக்கு ஆரம்பமாகும். (அ)

## இந்திய மீனவர்கள் அத்துமீறல்

பேசாலை கடற்பிரதேசத்தில் ஊடுருவல் செய்யும் இந்திய மீனவர்கள் இலங்கை மீனவர்களின் மீன்பிடி உபகரணங்களை திருடியும், சேதப் படுத்தியும் வருகின்றனர்.

இது தொடர்பாக மன்னார் அரச அதிபர் திரு. கணேஷிடம் முறைப்பாடு செய்யப் பட்டுள்ளது. (த)

## கூரையின்மேல் போராட்டம்

கொழும்பு ஜூன் 25
வேலை நீக்கம் செய்ததை ஆட்சேபித்து இரத்தோட்டை பிரதேசசபை ஊழியர் ஒருவர் சபையின் கூரையில் ஏறி நின்று உண்ணாவிரதப் போராட்டத்தை நடத்தினார்.

பிரதேசசபையின் தொழில்நுட்ப ஊழியரான சரத் விஜயசூரியாவே இப்படி ஒரு போராட்டத்தை நடத்தினார். பொலீஸார் தலையிட்டு போராட்டத்தை முடிவுக்கு கொண்டு வந்தனர். (ஒ-3)


மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி



தர்மலிங்கசர்மா குகனேஸ்வரசர்மா
(கண்ணன்)

தோற்றம்
19-01-1969

மறைவு:
28-06-1989

திதி: 25-06-1992 (அபரபட்ச தசமி)

நந்தாவில் கற்புலத்து அம்மன் கோவில்
நனி சிறந்து ஓங்கியெங்கும் புகழ்பரப்ப
எந்நாளும் தவறாமல் கிரியை யாவும்
இனிது செய்து அடியார்கள் நாளும் வாழ்த்த
தன்னாவி அகாலமாய்ப் பிரியுமட்டும்
தன்கடனில் குறையின்றி இயங்கி வந்த
கண்ணனெனும் குகனேஸ்வரசர்மா எங்கள்
கண்களினைக் குளமாக்கி சென்றதேனோ.

உற்றார், உறவினர்,
நண்பர்கள்.

நந்தாவில் அம்மன் கோவில்,
கொக்குவில்.

[21501]



முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



யாழ். இணுவையூர் தவில்மேதை,
விவகாரவித்வமணி

என். ஆர். சின்னராசா அவர்கள்

மண்ணகம்:
24 — 03 — 1934

விண்ணகம்:
06 — 07 — 1991

திதி: 25 — 06 — 1992 (வியாழக்கிழமை)

ஐயநின் இசையை, பண்பினை நீ இங்கு
ஆற்றிய சேவையை, இந்த
வையகம் மறவா திருப்பது குறித்து
மனம் குளிர்கின்றது - வணக்கம்!

அமரர் என். ஆர். சின்னராசா
குடும்பத்தினர்.

கந்தசுவாமி கோவிலடி,
இணுவில்.

[21512]


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

சங்கீதம் வினா-விடை, கிடைக்குமிடங்கள்: பூபாலசிங்கம், ஸ்ரீகாந்த், ஞானசுரபி, பாலாஜி, தினேஷ், மக்மிலன், மண்டேலா, ஆல்சிலோன், சோபிதா, ஸ்ரீலங்கா, வாலாம்பிகா, சுப்பிரமணியம், பிரசாந்தி, அறிவாலயம், திருமகள், ஸ்ரீகாந்தா, நடுவுத்துருத்தி. [21495]

ஹைலைன் பேட்டுக் குஞ்சுகள் உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்ளவும்: ரவி ரேடர்ஸ், பழக்கடை, திருநெல்வேலிச்சந்தி, அல்லது ந ரவி, இருபாலை றோட், நாகபூஷணி அம்மன் கோவிலடி, கோண்டாவில் கிழக்கு. [21510]

## தவறிவிட்டது

உமா கந்தையாவின் 715070561V இலக்க அடையாள அட்டை பேர்சுடன் மணல்தறை வீதிக்கும் யாழ். பல்கலைக்கழகத்திற்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து மணல்தறை வீதியில் உள்ள சுந்தரம் மருந்துக் கடையில் ஒப்படைக்கவும். [21506]

சுந்தப்பிள்ளை கனகலிங்கம் ஆகிய நான் கொக்குவில் மேற்கு கேணியடியிலிருந்து குளப்பிட்டி வீதிக்கு வரும்போது பாஸ்போர்ட், அடையாள அட்டை, சவூதி வாகன அனுமதிப் பத்திரம இவை அடங்கிய பை தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து வி. ராமசந்திரா, கேணியடி ஒழுங்கை, கொக்குவில் மேற்கு என்னும் முகவரியில் ஒப்படைக்கவும். [4901]

மனோகரன் கெங்கேஸ்வரவின் அடையாள அட்டை (இல. 680670153V) யும் பல்கலைக்கழக அனுமதி அட்டையுடன கூடிய பணப்பையும் கடந்த 20-06-92 இல் திருநெல்வேலி-சிவன் கோவில் வீதியில் தொலைந்து விட்டது. இவற்றைக் கண்டெடுப்பவர்கள் 108, சிவன் கோவில் வீதி, திருநெல்வேலி என்ற விலாசத்தில் ஒப்படைக்கவும். சன்மானம் வழங்கப்படும். [சி-2482]

## கோழிக்குஞ்சுகள் விற்பனைக்கு

தரமான கோழிக் குஞ்சுகள் விநியோகம். பதிவு செய்க. பழைய விலாசம்: இல. 9, கந்தையா லேன், சுன்னாகம். புதிய விலாசம்: சிங்கம் வீதி, உடுவில் மகளிர் பாடசாலை முன், மல்வம் வீதி ஊடாக, முதலாவது ஒழுங்கை. [20600]

ஒவ்வொரு செவ்வாய்க்கிழமைகளிலும் சிவப்பு, வெள்ளை, கறுப்பு இன பேட்டுக் குஞ்சுகளும், சேவல் குஞ்சுகளும் விநியோகிக்கப்படும். பதிவு செய்க. பேடு விலை 45 ரூபா. சேவல் விலை 20 ரூபா. சிங்கம் வீதி, உடுவில், மகளிர் கல்லூரிக்கு முன், மல்வம் வீதியூடாக, வலது புற சிங்கம் வீதி. [20599]

## விற்பனையாகின்றன

A/L வினா-விடை [உயர் கல்விப் பதிப்பகம், கொழும்புத்துறை] C.R கொப்பிகள். 5 ஆம் ஆண்டு கட்டுரைத் தேன்துளி 60, China கொப்பிகள் மலிவு விலையில் விற்பனையாகின்றன. மண்டேலா புத்தகசாலை, யாழ்ப்பாணம். அரஸ் புத்தக நிலையம், யாழ்ப்பாணம். [21467]

## மணப்பெண் தேவை

வெளிநாட்டில் உதவிக் கணக்காளர், வயது 36, நட்சத்திரம்: பூசம், இலக்கினம் சிங்கம், செவ்வாய்க் குற்றம் இல்லை. 28 - 32 வரை வயதுள்ள 5' 3'' க்கு குறையாத அழகிய இந்து மணப்பெண் தேவை. திருமணம் இலங்கையில் உடன் தொடர்பு கொள்க. 847, மே / பா, உதயன். [4791]

## புலமைப்பரிசில் பரீட்சை

ஆண்டு 5 க்கான புலமைப் பரிசில் மாதிரிப் பரீட்சை ஒவ்வொரு ஞாயிறும் காலை 9-15 மணிக்கு நடைபெறும். விடைத்தாள்கள் உடனடியாகத் திருத்திக் கொடுக்கப்படும். நாவலர் கல்வி கழகம். நாவலர் ஒழுங்கை, ஆனைப் பந்தி. [21492]

## இலவச திருமண சேவை

28 வயது. கேட்டை, கனடா தொழில் நுட்ப உத்தியோகத்தருக்கு மணப்பெண் தேவை. இலங்கையில் திருமணம் செய்து அழைக்கலாம். திருமணசேவையை நாடுபவர்கள் து. விமலா, நாச்சிமார் கோவிலடி, யாழ்ப்பாணம். ஞாயிறு காலையில. (4783)

30வயது மிருகசீரிடம், உதவிக் கணக்காளர் (Part-I) தனியார்துறை கொழும்பு உத்தியோகத்தருக்கு தகுந்த மணமகன் தேவை, தொடர்பு ஞாயிறு காலையில். து. விமலா, யாழ் நாச்சிமார் கோவிலடி. (4781)

## ஆயிரம் சமையல்காரர்

மதுரையில் எதிர்வரும் 28 ஆம், 29ஆம் திகதிகளில் நடைபெறவிருக்கும் அ.தி.மு.க மாநாட்டில் கலந்து கொள்ளும் கட்சித் தொண்டர்களுககு சாப்பாடு தயாரிக்க ஆயிரம் சமையல்காரர்கள் நியமிக்கப்பட இருக்கிறார்கள்.

தமிழக மாநில உணவு அமைச்சர் சிசுவநாதன் மேற்கண்ட தகவலை வெளியிட்டார். [ஓ-3]

BECON

பாரதிதாசன் கல்வி நிறுவனம்

யாழ்ப்பாணம்.

O/L 92 Day Class

நடைபெறுகின்றது.

விசேட கணித வகுப்பு

திரு. சதீஷ்

சனி, ஞாயிறு } 5 — 6 p.m.

[சி-2710]

கலாலயாவின்

மனைப் பொருளியலும், கைத்திறனும்

பொருட்காட்சி

★ ஓவியங்கள்
★ கைப்பணிகள்
★ செயற்கை மலர்கள்
★ கேக் அலங்காரம்
★ உணவு வகைகள்
★ தைத்த ஆடைகள்

இடம்: கலாலயா, விக்டோரியா வீதி, யாழ். நகர் (ஆஸ்பத்திரியின் பின்புறம்)

காலம்: 1992 ஜூன் 27ஆம், 28ஆம், 29 ஆம் திகதிகளில் காலை 9-00 முதல் மாலை 6-00 வரை.

[சி/2703]

## 31ஆம் நாள் நினைவஞ்சலி

தோற்றம்: 27 — 06 — 1936



மறைவு: 26 — 05 — 1992

### சுப்பிரமணியம் இராசலெட்சுமி

(ஈழத்து ரமணி அம்மா)

பிரபல பாடகி ஈழத்து ரமணி அம்மாவின் ஆத்மா சாந்திக்காக இறைவனைப் பிரார்த்திக்கும்:

மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், சகோதரி,
பிள்ளைகள்.

சம்பியன் லேன்,
கொக்குவில்.

[4786]

## ஓராண்டு நினைவஞ்சலி

மலர்வு: 20 — 08 — 1902



உதிர்வு: 06 — 07 — 1991

### அமரர் சின்னப்பு முத்துவேலு

[ஓய்வு பெற்ற உதவி அத்தியட்சகர், நில அளவைப் பகுதி மயிலிட்டி தெற்கு, தெல்லிப்பழை]

துன்பமெலாம் சருகாகத் துணையிருந்த எம் தந்தை
சென்றனையோ எம்மைவிட்டு ஏன் சென்றீர்-
வந்து சொல்வீர்.

தங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும்:

மனைவி, மக்கள், மருமக்கள்,
பேரர், பூட்டர்.

பரதன் வீதி,
[அரசாங்க வைத்தியசாலை வீதி],
உரும்பராய்.

[4902]

## மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்

### க. குலேந்திரா - S. L. A. S.

(முன்னாள் கோப்பாய் உதவி அரசாங்க அதிபரும், வலி-கிழக்கு பிரதேச சபை விசேட ஆணையாளரும்.)

மண்ணில்: 02 — 11 — 1939
விண்ணில்: 28 — 06 — 1989



அமரர்

### க. சிவசம்பு

(புகையிரதப் பகுதி-முன்னாள் பிரதம பாதுகாவலர், J. P)

மண்ணில்: 22 — 03 — 1905
விண்ணில்: 06 — 07 — 1989

மூன்று ஆண்டு சென்றதையா!
எமதில்லம் இருண்டதையா!
இருவரையும் நினைக்கும் போதினிலே,
எமதுள்ளம் துடிக்குதையா!

— குடும்பத்தினர்.

கொக்குவில் கிழக்கு.

[21490]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உதயன்

### சிவப்பு சமிக்ஞை!

தமிழர்கள் தங்களுக்கு ஒரு தாயகம் உண்டெனக் கூறுவதைக் கேட்பதற்கே சிங்களத் தலைவர்களுக்கு — அரசியல்வாதிகள், அறிஞர்கள் எனப்படுவோருக்கு — கோபம் பொத்துக் கொண்டு வருகிறது; 'அலர்ஜி' ஆகிவிடுகிறது.

நூறு ஆண்டுகளுக்கு முன்னர் இருந்த நிலையை வைத்துக் கொண்டு கிழக்கைத் தமிழர் தாயகம் என்ற பகுதிக்குள் அடக்க முடியுமா? இப்போது கிழக்கில் 43 சத வீதத் தமிழரும், 31 சத வீத முஸ்லிம்களும், 26 சத வீத சிங்களவரும் வாழும் போது அதனை எவ்வாறு தமிழர்களின் தாயகம் என்று கருத முடியும்? — என்றெல்லாம் குருட்டு மேதாவிலாசத்துடன் கேள்விகள் கேட்கிறார்கள்.

தமிழர் தாயகத்தை அங்கீகரித்தால் அல்லது ஏற்றுக் கொண்டால் முஸ்லிம்கள், கிறிஸ்தவர்கள் எல்லோரும் தாயகம் கேட்பார்கள் என்ற பயம் கூட அவர்களுக்கு உண்டு!

அதனாலேயே வடக்கு-கிழக்கை தமிழர்களின் பாரம்பரிய வாழ்விடம் என்று கூறுவதைக் கூட சிங்களப் பேரினவாதிகள் விரும்புவதில்லை.

தமிழர் பிரச்சினைக்குத் தீர்வுத் திட்டம் ஒன்றைத் தயாரிக்கும் போது வடக்கு-கிழக்கு இணைப்பை ஏற்க முடியாது என்று ஜனாதிபதி பிரேமதாஸா, அவர் மீது அதீத குருட்டு நம்பிக்கை வைத்திருந்த கொழும்பில் உள்ள தமிழ் அரசியல் கட்சிகளிடம் இம்மாத நடுப்பகுதியில் தெரிவித்ததும், இந்தப் பின்னணியிலேயே ஆகும்.

வடக்கையும், கிழக்கையும் பிரித்து, தமிழீழத்தைத் துண்டாடுவதற்கு மணலாறை ஒரு சிங்களப் பிரதேசமாக்குவது; அதனை ஒரு பெரும் இராணுவ வலயமாக்குவது என்பது கொழும்பு அரசின் சூழ்ச்சி மிகுந்த நீண்ட காலத் திட்டமாகும். மணலாறைப் பிடித்து விட்டால், தென் தமிழீழத்தையும், வட தமிழீழத்தையும் துண்டாடி விடலாம்; தொடர் நிலப்பரப்பைப் பிரித்து விடலாம் என்பது அதன் கபட எண்ணமாகும்.

அதற்கும் மேலாகத் தமிழீழத்தை வன்னி என்றும், குடா நாடு என்றும் மேலும் துண்டுகளாக்குவதற்கு அரசு திட்டமிட்டிருக்கிறது என்ற செய்தி பெரும் அபாய அறிவிப்பாகக் கொள்ளப்பட வேண்டியதாகும். தமிழீழத்தைத் துண்டாடி மூன்று இராணுவ வேலிகளை அமைக்கும் திட்டம் தமிழர்களை ஒழித்து, அவர்களின் தாயகத்தை முற்றாக இராணுவ ஆக்கிரமிப்புப் பூமியாக்குவதற்கான சிவப்புச் சமிக்ஞையாகக் கருதப்பட வேண்டும்.

விடுதலைப் புலிகளின் பரந்த அளவிலான தாக்குதல்களை முறியடிப்பதற்காக மட்டும் அரசு இராணுவ வேலிகளை அமைப்பதாகக் கருதி விடக் கூடாது. தமிழ்ப் பிரதேசத்தை இராணுவ அடக்கு முறைக்கு உட்பட்ட பகுதியாக்கும் நோக்குடனேயே இத் திட்டம் வகுக்கப்பட்டிருக்கிறது என்பதில் சந்தேகமே இல்லை.

அரசு திட்டமிட்டிருப்பது போல தமிழீழத்தில் மூன்று இராணுவ வேலிகளையும் போடுவதற்கு அனுமதித்து விட்டால், அதன் பின்னர் தமிழருக்கு மீட்சி கிடையாது. தமிழீழத்தின் மீது இராணுவம் அமர்ந்து கொள்ளும். சுதந்திரம், விடுதலை என்று சிந்திக்கவும் முடியாமற்போய் விடும்.

வெள்ளம் வருமுன் அணை கட்டப்பட வேண்டும் அரசு இராணுவ வேலிகள் அமைக்க இடங்கொடாமல் செயற்படுவதற்கு விடுதலைப் புலிகளுக்கு பக்கபலமாக எல்லோரும் அணிதிரள்வதே அதற்கான மார்க்கமாகும்.

# சுவீடிஷ் அரசின் சமாதான முயற்சிக்கு ஸ்ரீலங்கா அரசு இதுவரை பதில் இல்லை

## புலிகளின் சர்வதேச செயலகம் அறிக்கை

இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண சர்வதேச மட்டத்தில் சமாதான பேச்சுக்களை நடத்துவதற்கு சுவீடிஷ் அரசாங்கம் எடுத்து வந்த முயற்சிக்கு ஸ்ரீலங்கா அரசு பதிலளிக்காது விட்டு விட்டது என்றும்—

சுவீடிஷின் இம் முயற்சியை வரவேற்று தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் சம்பிரதாயபூர்வமான கடிதம் ஒன்றை அந்த நாட்டின் வெளியுறவு அமைச்சுக்கு அனுப்பி வைத்துள்ளது என்றும்—

பிரிட்டனைத் தலைமையகமாகக் கொண்டு இயங்கும் விடுதலைப்புலிகளின் சர்வதேசச் செயலகம் விடுத்த பத்திரிகை அறிக்கை ஒன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது;

பல நெருக்கடிகளை எதிர்நோக்கும் பிரேமதாஸ அரசாங்கம், தனது ஆட்சி நிலைத்து நிற்க வேண்டும் என்பதற்காக சிங்கள வாக்காளரைத் திசை திருப்பும் நோக்கில், தமிழ் மக்களுக்கு எதிராக இராணுவ நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளது.

யாழ்ப்பாணத்திலும் முல்லைத்தீவிலும் ஸ்ரீலங்காப் படையினர் தற்போது நடத்தி வரும் இராணுவத் தாக்குதல் பிரேமதாசா அரசாங்கத்தின் இனக்கொலை நோக்கத்தை வெளிப்படுத்துகின்றது; உதட்டளவில் சமாதானம் பேசிக் கொண்டு. தமிழ் மக்களுடனான பிரச்சினைக்கு இராணுவத் தீர்வு காணுவது என்ற பிரேமதாசா அரசின் உண்மை நிலையை தற்போதைய இராணுவத் தாக்குதல் காட்டுகின்றது.

தமிழர் தாயகத்தில், குடிமக்கள் வாழும் பகுதிகளில் கண்மூடித்தனமான விமானத் தாக்குதல் மற்றும் ஆட்டிலறி

## பிரேமா உதட்டளவில் சமாதானம் பேசுகிறார்!

ஷெல் தாக்குதல் ஆகியவற்றினால் நூற்றுக்கு அதிகமான குடிமக்கள் கொல்லப்பட்டும், காயமடைந்தும் உள்ளனர்;

தாயகத்தை ஆக்கிரமிக்கும் சிங்களவர்களைத் தடுத்து நிறுத்தும் தமிழ் மக்களின் உறுதி மனப்பான்மையை பலப்படுத்துவதற்கும் ஒன்று திரட்டுவதற்கும் பிரேமதாஸா அரசாங்கத்தின் இராணுவத் தாக்குதல் உதவும். அந்த உறுதியின் வெளிப்பாடே தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கம்.

### புலிகளின் நிலைப்பாடு

தற்போது உருவாகிவரும் புதிய உலக ஒழுங்கின்படி, சர்வதேச மத்தியஸ்தம் ஒன்று தான் முழுத்தீவிலும் அமைதி, சுதந்திரம் மற்றும் ஸ்திர நிலை ஆகியவற்றை கொண்டு வரும் என்பது தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கத்தின் நிலைப்பாடு ஆகும். அந்த நிலைப்பாட்டை பிரேமதாஸா அரசாங்கத்தின் நடவடிக்கை நிரூபிக்கிறது;

கடந்த சில மாதங்களாக, தமது அரசாங்கம் கலந்தாலோசனை, கருத்துடன்பாடு, கருத்திணக்கம் ஆகிய பாதையில் செல்கிறது என்பதைச் சர்வதேச சமூகத்திற்குப் படம்பிடித்துக் காட்ட பிரேமதாஸ அரசாங்கம் முயற்சி செய்து வருகிறது. இக்கருத்துடன்பாட்டை அடைவதற்கு நாடாளுமன்றத் தெரிவுக்குழுவே பொருத்தமான கருவி என்றும் பிரேமதாஸா அரசாங்கம் கூறியுள்ளது.

ஆளும் ஐக்கியதேசியக்கட்சியோ அல்லது எதிர்க்கட்சியான சுதந்திரக் கட்சியோ இத்தெரிவுக் குழுவிடம் தங்கள் யோசனைகளைச் சமர்ப்பிக்கவில்லை என்பது முக்கியமானது. கடந்த ஆண்டில் சர்வதேச மத்தியஸ்த முயற்சிகளை ஏற்றுக் கொள்வதற்கு பிரேமதாஸா அரசாங்கம் தொடர்ந்து மறுத்துவந்தது.

இந்த நிலையில் சர்வதேச மத்தியஸ்த முயற்சி ஒன்றை சுவீடிஷ் அரசாங்கம் கடந்த மார்ச் மாதம் 6 ஆம் திகதி மேற்கொண்டது.

### சுவீடிஷ் அரசின் முதற்கட்ட முயற்சி

சமாதானப் பேச்சுக்களில் சுவீடன் தன்னை ஈடுபடுத்திக் கொள்ள வேண்டும் என்று சுவீடனை இருதரப்பினரும் திட்டவட்டமாகக் கோர வேண்டும் என்பதே சுவீடிஷ் அரசு மேற்கொண்ட முயற்சியின் முதல் கட்டமாக இருந்தது.

### புலிகள் வரவேற்பு

சுவீடனின் இந்த முயற்சியை வரவேற்று தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் சுவீடிஷ் வெளியுறவு அமைச்சுக்கு சம்பிரதாயபூர்வமான கடிதம் ஒன்றை அனுப்பி வைத்தது; ஸ்ரீலங்கா அரசாங்கமோ அந்த முயற்சிக்குப் பதிலளிக்காது விட்டது.

பீரங்கிகளாலும், துப்பாக்கிகளாலும் சுதந்திரப் போராட்டத்தை நசுக்கி விடலாம் என்று பிரேமதாஸா அரசாங்கம் நம்புமானால் அது தவறாகும். வீரர்களினதும் அப்பாவிக் குடிமக்களினதும் இரத்தத்தைக் குடித்த இந்த மண் ஆக்கிரமிப்பாளருக்கு அமைதியைக் கொடுக்காது. ஸ்ரீலங்கா இராணுவத்தினருக்கு இந்த மண் சகதியாகவே இருக்கும்;

கஷ்டத்துக்குள்ளாகி இருக்கும் ஓர் அரசாங்கம் தப்பிப் பிழைக்கக் காலம் காலமாகக் கடைப்பிடிக்கும் ஒரு வழி போன்று —

தமிழர் நடத்தும் தாக்குதலின் விளைவைப் பார்த்து முடிவுகளை எடுப்பதில் பிரேமதாஸா அரசாங்கம் தங்கி இருக்கின்றது.

இவ்வாறு விடுதலைப்புலிகள் இயக்கம் வெளியிட்ட பத்திரிகை அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. ★

# மேஜர் முரளி நினைவு புதிர்ப் போட்டி

யாழ்ப்பாணம், ஜூன் 25

விடுதலைப் புலிகள் மாணவர் இயக்கத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள மேஜர் முரளி நினைவு நாள் புதிர்ப் போட்டித் தொடரில் யாழ். மாவட்ட பாடசாலைகளுக்கிடையிலான கொத்தணி மட்டப் போட்டிகள் இன்று ஆரம்பமாகுகின்றன.

தொடர்ந்து 26, 29, 30 மற்றும் முதலாம் திகதிகளில் இப்போட்டிகள் நடைபெறும்.

இன்று போட்டி நடைபெறும் கொத்தணிகளும் இடங்களும் வருமாறு:-

**காலை 9.30 மணி**

- ★ அச்சுவேலி — அச்சுவேலி ம. வி.
- ★ காரைநகர் — விக்ரோறியா கல்லூரி
- ★ யாழ்நகர் — மத்திய கல்லூரி
- ★ பருத்தித்துறை — ஹாட்லி
- ★ சாவகச்சேரி நகர் — டிறிபேக்
- ★ புங்குடுதீவு — கந்தர்மடம், யூனிவேர்சல்

**நண்பகல் 11.30 மணி**

- ★ புத்தூர் — நடராஜா ராமலிங்கம் வி.
- ★ சுழிபுரம் — விக்ரோறியா
- ★ யாழ்நகர் தெற்கு — சென் சார்ள்ஸ் ம. வி.
- ★ புலோலி — வேலாயுதம் ம. வி.
- ★ சாவ. வடநகர் — சாவ. இந்து

**பிற்பகல் 1.30 மணி**

- ★ வேலணை — கொட்டடி நமசிவாய வி.

[அடுத்து வரும் நாட்களுக்குரிய போட்டி அட்டவணைகள் பின்னர் பிரசுரமாகும்]

## உற்சவம்

சித்தன்கேணி, ஜூன் 25

வட்டுக்கோட்டை வீரபத்திர சிவன் கோயிலின் வருடாந்த உற்சவம் நாளை வெள்ளிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகும். [உ-142]

## நாளை

யாழ்ப்பாணம், ஜூன் 25

ஏழாலை மகாவித்தியாலயத்தின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டிகள் வித்தியாலய மைதானத்தில் நாளை வெள்ளி நடைபெறவுள்ளன. (உ-5)

### ம. எண்ணெய்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

பொருள்களைப் பதுக்குவோர், கூடிய விலையில் விற்போர் பற்றிய தகவல்களை அண்மையில் உள்ள காவல் பணிமனைக்கு உடனுக்குடன் தெரிவிக்குமாறு பொது மக்களை அன்புடன் வேண்டுகின்றோம்.

பொதுமக்கள் கொடுத்த தகவலை வைத்து, கூடிய விலையில் விற்றார்கள் எனும் சந்தேகத்தின் பேரில் ஒரு சில மண்ணெண்ணெய் வர்த்தகர்கள் நேற்று காவல் துறையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர் — என்றும் அந்தக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# உலுக்குளம் பகுதியில் இருவர் சுட்டுக் கொலை

வவுனியா, ஜூன் 25

வவுனியா, உலுக்குளம் பகுதியில் அறுவடை வேலைகளுக்குச் சென்ற இருவரை இனந்தெரியாத சிலர் சுட்டுக் கொன்றனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

யூ. அருணாசிறி [24 வயது], உலுக்குளம் தர்மபால வித்தியாலய ஆசிரியரான கே. சி. விஜயதாச [27 வயது] ஆகிய இருவருமே கடந்த 18 ஆம், 19 ஆம் திகதிகளில் கொலையுண்டனர்.

பாதுகாப்பு வலயத்துக்கு அப்பால் உள்ள வயல்களில் அறுவடையில் ஈடுபட்டிருந்த போதே இவர்கள் கொலையுண்டனர் என்று இராணுவத் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

இதேசமயம் அறுவடை வேலைகளுக்கு பாதுகாப்பு வழங்கவென அங்கு மேலதிக இராணுவத்தினரும், பொலீஸாரும் அனுப்பப்பட்டுள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டது. [ஒ-3]

## தொல்புரத்தில் போதைப் பொருள் எதிர்ப்பு தினம்

வட பிரதேச நல்லொழுக்க சம்மேளனத்தினர் நாளை வெள்ளிக்கிழமை சர்வதேச போதைப்பொருள் எதிர்ப்புத் தினத்தை அனுஷ்டிக்கவுள்ளனர்.

மாலை 3 மணிக்கு சுழிபுரம், தொல்புரத்திலுள்ள சம்மேளனப் பணிமனையில் போதைப் பொருள் எதிர்ப்புத் தினவிழா நிகழ்ச்சிகள் ஆரம்பமாகும்.

சிறப்புரைகள், நாடகம், ... ஆகிய நிகழ்ச்சிகள் ... விழாவில் இடம் பெறும்.

## கண்காட்சி

யாழ்ப்பாணம், ஜூன் 25

மருதனார்மடம் கல்விக் கோட்டப் பாடசாலைகளைச் சேர்ந்த மாணவர்களின் சிற்ப, சித்திரக் கண்காட்சி ஒன்று நேற்றுப் பிற்பகல் இராமநாதன் கல்லூரி மண்டபத்தில் கோட்டக் கல்விப் பணிப்பாளர் திரு இ. சிவானந்தனால் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

கண்காட்சி இன்றும் நாளையும் தொடர்ந்து இடம் பெறும். [உ-5]

## இலங்கையர் கைது

புதுடில்லி, ஜூன் 25

போலி பாஸ்போட், வீஸா தயாரிக்கும் மோசடிகளில் ஈடுபட்டதாகக் கூறப்படும் இலங்கையர் ஒருவரையும் இந்தியர் ஒருவரையும் புதுடில்லிப் பொலீஸார் கைது செய்தனர்.

அவர்களிடமிருந்து நூறுக்கும் அதிகமான — இந்திய, வெளிநாட்டு — போலி பாஸ்போட்டுக்கள் கைப்பற்றப்பட்டன என்றும் அறிவிக்கப்பட்டது. [உ-10]

## கிரிக்கெட் மத்தியஸ்தர் தெரிவு

யாழ்ப்பாணம், ஜூன் 24

புதிய மத்தியஸ்தர் தெரிவுக்காக யாழ்ப்பாணம் கிரிக்கெட் மத்தியஸ்தர் சங்கத்தினால் நடத்தப்படவுள்ள பரீட்சைக்கான இறுதி வகுப்பு எதிர்வரும் 29 ஆம் திகதி பிற்பகல் 4 மணிக்கு யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில் நடைபெறும்.

மேற்படி பரீட்சைக்குத் தோற்ற விரும்புபவர்கள் இந்த இறுதி வகுப்புக்கு சமுகமளித்து தம்மை பதிவு செய்து கொள்ளலாம் என்று சங்க வட்டாரங்கள் தெரிவித்தன. (உ)

## ராமோஸ் தெரிவு குறித்து அறிவிப்பு

மணிலா, ஜூன் 24

பிலிப்பீன்ஸின் ஜனாதிபதியாக திரு. பிடல் ராமோஸ் தெரிவு செய்யப்பட்டுள்ளார் என்று அந்த நாட்டின் நாடாளுமன்றம் உத்தியோகபூர்வமாக அறிவித்தது.

முன்னாள் பாதுகாப்பு அமைச்சரான திரு. பிடல் ராமோஸ், இம் மாதம் 30 ஆம் திகதி ஜனாதிபதி பதவியைப் பொறுப்பேற்பார்.

ஜனாதிபதித் தேர்தலில் கடந்த மாதம் 11 ஆம் திகதி அளிக்கப்பட்ட வாக்குகளில் 23 சத வீத வாக்குகளையே திரு. ராமோஸ் பெற்றிருந்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்., கிளிநொச்சிக்கு 7 உதவி வைத்தியர்கள்

யாழ். கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலைகளுக்கு ஏழு பேர் உதவி வைத்தியர்களாக எதிர் வரும் முதலாம் திகதி நியமனம் பெறவிருக்கின்றனர்

கடந்த இரண்டு வருடங்களுக்கு முன்னர் யாழ். மருத்துவ பீடத்தில் இருந்து வெளியேறிய 18 பேருக்கு உதவி வைத்தியர்களாக நியமனம் வழங்குவதில் சுகாதார அமைச்சுக்கும், மாகாண சபை அமைச்சுக்கும் இடையில் இழுபறி நிலை நிலவி வந்தது தெரிந்ததே.

தற்சமயம் இந்த இழுபறி நிலைக்கு முடிவு காணப்பட்டு யாழ்., கிளிநொச்சி மாவட்டங்களைச் சேர்ந்த 7 பேருக்கு நியமனம் வழங்கப்பட்டுள்ளது. [ஓ-3]

# புதிய இஸ்ரேல் பிரதமராக முன்னாள் ராணுவ ஜெனரல்

டெல்அவிவ் ஜூன் 25

இஸ்ரேலின் புதிய பிரதமராக எதிர்வரும் 13ஆம் திகதி பதவியேற்கவிருக்கும் 70 வயதான யிற்ஷாக் ரபின், முன்னாள் இராணுவ ஜெனரல் ஆவார்.

சுமார் 25 ஆண்டுகளுக்கு முன்னர் இஸ்ரேலியப் படைகளை வழி நடத்தி, மேற்குக் கரை மற்றும் காஸா பகுதிகளைப் பிடித்து இஸ்ரேலுடன் இணைத்தவர் ரபின் என்பது குறிப்பிடத்தக்கது.

அன்று தாம் கைப்பற்றிய அரபுப் பிரதேசங்களில் சிலவற்றை பலஸ்தீனியர்களிடம் ஒப்படைத்து, மத்தியகிழக்குப் பிரச்சினைக்கு அமைதித் தீர்வு காணவேண்டும் என்ற விருப்பமுடையவர் ரபின் என்று சொல்லப்படுகின்றது.

# உடற்பயிற்சி ஆசிரியருக்கு விண்ணப்பம்

யாழ்ப்பாணம், ஜூன் 15

விளையாட்டு, உடற்பயிற்சி ஆசிரியர்களைத் தெரிவு செய்வதற்கும், மனையியல், விவசாயத் துறைகளில் டிப்ளோமா பட்டம் பெற்றவர்களை உதவி ஆசிரியர்களாக நியமிப்பதற்குமான விண்ணப்ப முடிவு தினம் நாளையாகும். இந்தப் பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுவது தொடர்பான வர்த்தமானி அறிவித்தலை இன்றும் நாளையும் மின்சார நிலைய வீதி, 2 ஆவது ஒழுங்கையில் உள்ள உதயன் அலுவலகத்தில் வேலை நேரத்தில் பார்வையிடலாம். (உ)

# போலி சி. ஐ. டிகள் மூவர் கைது

கொழும்பு, ஜூன் 25

சி. ஐ. டியினர் எனக் கூறி பணம் பறிப்பதில் ஈடுபட்ட மேலும் 3 பேர் கொழும்பில் கைது செய்யப்பட்டனர்.

ஜம்பட்டா வீதியில் வசிக்கும் வடபகுதியைச் சேர்ந்த தமிழர்களிடம் பணம் பறிக்க முயன்றபோதே அவர்கள் கைது செய்யப்பட்டனர். [ஓ-த]

# கொள்ளை

கொழும்பு, ஜூன் 23

மட்டக்களப்பிலிருந்து கொழும்புக்கு தமது அலுவலக வேலைகள் தொடர்பாக வந்த மட்டக்களப்பைச் சேர்ந்த மூவரிடம் மருதானை தொழில் நுட்பக் கல்லூரி சந்தியில் வைத்து இனந்தெரியாத இளைஞர் கோஷ்டி 20 ஆயிரம் ரூபா பெறுமதியான பொருள்களை கடந்த வெள்ளியிரவு கொள்ளையடித்துச் சென்றதாக அறிவிக்கப்படுகிறது. (த)

# சுவெலுக்கு ஆதரவு!

புதுடில்லி, ஜூன் 25

இந்திய ஜனாதிபதித் தேர்தலில் சுயேச்சை வேட்பாளராகப் போட்டியிடும் பேராசிரியர் ஜி. ஜி. சுவெல் சார்பாக தேசிய முன்னணி இரண்டு தொகுதி வேட்பு மனுக்களையும் பாரதீய ஜனதாக் கட்சி ஒரு தொகுதி வேட்பு மனுவையும் நேற்று தாக்கல் செய்தன.

தேசிய முன்னணி தாக்கல் செய்த ஒரு தொகுதி வேட்பு மனுவில் முன்னாள் பிரதமர் வி. பி. சிங், சரத்யாதவ். ஜெய்ப்பால் ரெட்டி ஆகியோர் கையெழுத்திட்டிருந்தனர்.

பாரதீய ஜனதாக் கட்சி தாக்கல் செய்த வேட்பு மனுவில் அக்கட்சியின் தலைவர் எல். கே. அத்வானி கையெழுத்திட்டிருந்தார்.

# சீனாவின் முன்னாள் ஜனாதிபதி மரணம்

சீனாவின் முன்னாள் ஜனாதிபதியான லீ ஷியான் நியென் தனது 83 ஆவது வயதில் நேற்று முன்தினம் காலமானார்.

சீன அரசியலில் பின்னணியில் இருந்து செயற்பட்ட கடும் போக்காளரான இவர், பொருளாதாரச் சீர்திருத்தங்களை எதிர்த்து வந்தார்.

## அமைதியை...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

என்றே குற்றச்சாட்டுகளைச் சுமத்தி சேறு பூசுவதாக அவர் நினைத்தால், எனக்கு எதிராக மானநஷ்ட வழக்குத் தொடரட்டும் பார்க்கலாம். ஜெயலலிதா மீதான குற்றச்சாட்டுகளை ஆதாரங்களுடன் நிரூபிக்க நான் தயாராக இருக்கிறேன் — என்றார். (உ-ஓ-3)

## கடத்தப்பட்ட

# சண்முகத்தின் உறவினரை தேடி பொலீஸார் வேட்டை

சென்னை, ஜூன் 25

ராஜீவ் கொலை தொடர்பாக கைது செய்யப்பட்டு பொலீஸ் காவலில் இருக்கையில் தற்கொலை செய்ததாக கூறப்படும் சண்முகத்தின் உறவினரான வைத்தியநாதனைப் பொலீஸார் தேடி வருகின்றனர்.

கடந்த 9 ஆம் திகதி வைத்தியநாதனின் வீட்டுக்கு வந்த இனந்தெரியாத கோஷ்டி ஒன்று அவரை காரில் கடத்திச் சென்றது என்று செய்தி வெளியாகியிருந்தது தெரிந்ததே.

அவரை தேடி பொலீஸார் வலை விரித்துள்ளனர்.

மோப்பம் பிடிக்கும் நாய்கள் வேதாரணியத்துக்கு அண்மையாக உள்ள வடகாடு என்னும் இடத்தில் உள்ள குளம் இருந்த பகுதிக்கு பொலீஸாரை இட்டுச் சென்றன. அடுத்த தடயங்களைக் கண்டு பிடிக்க பொலீஸார் நீரிறைக்கும் இயந்திரங்கள் கொண்டு குளத்து நீரை இறைத்தனர் எனினும் தடயம் கிடைக்கவில்லை.

அவர் உயிருடன் இருக்கிறாரா இல்லையா என்பது குறித்து பொலீஸார் ஆராய்ந்து வருகின்றனர். (ஓ-3)

# உம்மைக் கொன்று டயர் போட்டு எரிப்பேன்! மாகாண உறுப்பினருக்கு கொலைப் பயமுறுத்தல்

கொழும்பு, ஜூன் 25

''உம்மைக் கொன்று, டயர் மீது போட்டு எரிப்பேன்''— இப்படிக் கூறி நுவரெலியா மாநகரசபை மேயரின் மெய்ப் பாதுகாவலர் ஒருவர் தம்மைப் பயமுறுத்தியதாக மத்திய மாகாணசபை உறுப்பினர் குணசிங்கா சூரியப்பெருமா, சபையின் கூட்டத்தில் பகிரங்கமாக முறையிட்டார்.

சபைத் தலைவர் திரு. டி. பி. சமரதுங்கா சபைக் கூட்டத்துக்குத் தலைமை வகித்தார்.

திரு சூரியப்பெருமா மேலும் பேசுகையில்—

நுவரெலியா மாநகரசபையின் நிர்வாகம் தொடர்பான சில கேள்விகளை நான் முதலமைச்சரிடம் சமர்ப்பித்திருந்தேன். இது பற்றி விசாரணை நடத்துவதாக முதலமைச்சர் கூறினார். ஆனால் ஒன்றுமே நடக்கவில்லை. அண்மையில் நுவரெலியாவில் நடந்த நிகழ்ச்சி ஒன்றில் கலந்து கொண்டபோதே மேயரின் மெய்ப்பாதுகாவலர் என்னை மிரட்டினார். மேயர் மீது குற்றம் சுமத்துவதை நிறுத்தாவிட்டால் எனது வீட்டையும், உடமைகளையும் அழித்துவிட போவதாகவும் அந்த மெய்ப் பாதுகாவலர் மிரட்டினார். இது பற்றி பொலீஸாருக்கு முறைப்பாடு செய்துள்ளேன்- என்றார். [ஓ-எ]


# முக்கிய அறிவித்தல்

புங்குடுதீவு 4ஆம் வட்டாரம் பிட்டியம்பதி ஸ்ரீ காளிகா பரமேஸ்வரி அம்பாள் ஆலய வருடாந்த மகோற்சவம் இவ்வருடம் நடைபெறவில்லை என்பதை அடியார்கள் அனைவருக்கும் அறியத்தருகின்றோம்

விரத தினங்கள்

கொடியேற்ற தினம் : 27-06-92 சனிக்கிழமை
தேர்த்திருவிழா தினம் : 05-07-92 ஞாயிற்றுக்கிழமை
தீர்த்தத்திருவிழா தினம் : 06-07-92 திங்கட்கிழமை

ஆலய பரிபாலன சபையினர்.

[4796]

# திருமறைக் கலாமன்றம் தொடர் நிகழ்ச்சிகள்

25-6-1992 சித்திரக் கருத்தரங்கு
28-6-1992 பண்பாடு கருத்தரங்கு
30-6-1992 இலக்கிய அவை

நேரம்: மாலை 5.00 மணி
இடம்: கேட்போர் கூடம்

[C/2153]


# மரண அறிவித்தல்

## மரியாம்பிள்ளை சந்திரன்

திரு. மரியாம்பிள்ளை சந்திரன் 23-06-92 செவ்வாய் இரவு காலமானார். இவர் பூமலர் சறோஜினியின் அன்புக் கணவரும், சமிலா [சுண்டிக்குளி மகளிர் கல்லூரி], லக்ஷ்மன் [பரியோவான் கல்லூரி] ஆகியோரின் அன்புத் தந்தையும், காலஞ்சென்ற I. S மரியாம்பிள்ளை, திருமதி எலிசபெத் மரியாம்பிள்ளை ஆகியோரின் அன்புப் புதல்வரும், ஜெயமலர், இராசமலர், சந்திரமார் ஆகியோரின் அருமைச் சகோதரரும், காலஞ்சென்ற Dr. A. F. வின்சன்ற், திரு. B. M. ஜோசப் [இளைப்பாறிய உள்ளூராட்சி உதவி ஆணையாளர்], திரு F. L. ஜெகநேசன் [வேலை மேற்பார்வையாளர், யாழ். மாநகரசபை], திரு J. K. அழகராஜா [இளைப்பாறிய பிரதம லிகிதர், நீர்ப்பாசனத் திணைக்களம்], திரு K தங்கராஜா [இளைப்பாறிய ஆசிரியர், சோமஸ்கந்தா கல்லூரி, புத்தூர்], திருமதி டொன்மலர் சீவகிரீடம் ஆகியோரின் மைத்துனருமாவார்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும். நல்லடக்கம் பற்றிய அறிவித்தல் பின்னர் அறியத் தரப்படும்.

16, ரெம்பிள் லேன்,
யாழ்ப்பாணம்.

தகவல்:
அலெக்ஸ் வின்சன்ற்
(மருமகன்)

[21520]

# அஞ்சலி

## பத்மஸ்ரீ மஹாராஜபுரம் வி. சந்தானம் அவர்கள்

கர்நாடக சாஸ்திரீய இசைக்கு ஒரு தூணாகவும் அரணாகவும் விளங்கி யாழ்ப்பாணத்திலும் தனது முத்திரையைப் பதித்த பத்மஸ்ரீ மஹாராஜபுரம் வி. சந்தானம் அவர்களின் திடீர் மறைவு எமக்குப் பேரதிர்ச்சியைத் தருகிறது.

அன்னாரது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திப்பதோடு அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தையும் தெரிவித்துக்கொள்கிறோம்.

நாதஸ்வர வித்துவான் வி. கே. கானமூர்த்தி
நாதஸ்வர வித்துவான் வி. கே. பஞ்சமூர்த்தி
இசை விமர்சகர் நவாலியூர் நா. சச்சிதானந்தன்

கோண்டாவில். [21522]

# கண்ணீர் அஞ்சலி

கடந்த 23.06.1992 அன்று கொழும்பில் எம்மை ஆறாத்துயரில் ஆழ்த்திவிட்டு திடீரென எம்மைவிட்டு மறைந்த யாழ். பல்கலைக்கழக மருத்துவ பீடத்தின் சட்டமருத்துவத்துறைப் பேராசிரியர் ந. சரவணபவானந்தன் அவர்களின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும் அதேவேளை அன்னாரின் பிரிவினால் துயருறும் அவரது குடும்பத்தினருக்கும் மற்றும் அனைவருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

''நெருநல் உளனொருவன் இன்றில்லை
- யென்னும்
பெருமையுடைத்திவ்வுலகு''

மருத்துவமாணவர் ஒன்றியம்
யாழ். பல்கலைக்கழகம்

[21521]

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/8 இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 25 - 06 - 1992 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org